

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக்கூட்டம் நேற்று 24–2–2025 சென்னை கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இதில் என்.வி.என்.கனிமொழி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.தனசேகரன், எஸ். அருணாச்சலம், பாலவாக்கம் க.சோமு, மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், அணிகளின்நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் வடக்கு பகுதி 161 வது வட்ட கழக செயல் வீரர் லட்சுமிபதி அவர்களின் மகள் பவித்ரா திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார் உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், பகுதி செயலாளர் ஜெயக்குமார் மற்றும் அப்தாஹிர், ரவி, எம்.ஜி. கருணாநிதி, கார்த்திக், உதயா, ரமேஷ், அலீம், சந்தோஷ், ராஜவேல், பாரூக், சுரேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மும்மொழி கொள்கையைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!

## சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணியினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்ட அமைப்பாளர் வானவில் விஜய் வேண்டுகோள்!

சென்னை, பிப். 25

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் வானவில் விஜய் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியைத் திணித்து மீண்டும் மொழிப் போருக்கு நிர்ப்பந்திக்கும் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (25.02.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு, பாரிமுனை சுங்கவரி அலுவலகம் அருகில் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம்) நடைபெறுகிறது.

இக்கண்டனக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்க இருப்பதால் மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாணவரணியினர் கல்லூரி, பள்ளி மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வானவில் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

### மும்மொழிக் கொள்கையை கட்டாயமாக்கும் வஞ்சக செயல்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து – இன்று

## சென்னை தென்மேற்கு மாவட்ட மாணவரணி சார்பில் பேரணி - ஆர்ப்பாட்டம்!

### மாணவரணியினருக்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் வேண்டுகோள்!

சென்னை, பிப்.25-

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் எஸ். சரவணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

நீட் தேர்வு, க்யூட் தேர்வு, தேசிய கல்விக் கொள்கை, யு.ஜி.சி. 2025 வரைவு விதிமுறைகள் மூலம் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் மாநில உரிமைகளைச் சிதைக்கும் விதமாகவும், தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் விதமாகவும் செயல்பட்டு வரும் பா.ஜ.க. அரசு தற்போது நம் உயிரிலும் உணர்விலும் கலந்துள்ள தாய்த்தமிழை அழித்து இந்தியைத் திணிக்கும் மும்மொழிக் கொள்கையை கட்டாயமாக்கும் வஞ்சக செயல் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு. கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தி. மு.கழக இளைஞரணி செயலாளர் - துணை முதலமைச்சர், மாணவர் அணி செயலாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோரின் ஆணைக்கிணங்க ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து அறவழிப் போராட்டம் இன்று (25-02-2025 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் சென்னை தென்மேற்கு மாவட்டம் தி.மு.க. மாணவர் அணி மற்றும் இந்திய மாணவர்களின் கூட்டமைப்பு சார்பில் எனது (எஸ்.சரவணன், மாவட்ட அமைப்பாளர்) தலைமையில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்று கூடி ராணி மெய்யம்மை பள்ளி அருகிலிருந்து நடந்து ஊர்வலமாகச் சென்று பி.எஸ்.என்.எல். அலுவலகம், ஆர்.கே.மடம் சாலை அருகே அறவழியில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

சென்னை தென்மேற்கு மாவட்ட மாணவரணியினர் இந்தப் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகப் பங்கேற்றிடுமாறு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.சரவணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### எஸ்.மதன்மோகன் எம்.சி. முன்னிலை!

## சேப்பாக்கம் 63வது வட்டக் கழகக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் பி.பிரபாகரன் அறிக்கை!

சென்னை, பிப்.25

சேப்பாக்கம் பகுதி 63வது வட்டச் செயலாளர் பி.பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேப்பாக்கம் பகுதி 63வது வட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ். மதன்மோகன் முன்னிலையிலும், வட்ட அவைத் தலைவர் நெல்லை புகாரி தலைமையில் இன்று (25.2.2025 - செவ்வாய் கிழமை) மாலை 5 மணி அளவில் புதுப்பேட்டை ஆதித்தனார் சாலை ஆவின் பாலகம் அருகில் நடைபெறுகிறது. எனவே இக்கூட்டத்திற்கு வட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகள் அனைவரும் தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு வட்டச் செயலாளர் பி.பிரபாகரன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சென்னை தெற்கு மாவட்டம்

## கலைஞர் நகர் தெற்கு - 138 ‘அ’ வட்ட செயற்குழுக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் ஜம்பு முருகன் அறிக்கை!

சென்னை, பிப்.25-

சென்னை தெற்கு மாவட்டம் - கலைஞர் நகர் தெற்குப் பகுதி - 138 ‘அ’ வட்டச் செயலாளர் ஜம்பு முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆலோசனைப்படி, தமிழ்நாடு முதல்வர், கழகதலைவரின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு, 138அ வட்ட செயற்குழு கூட்டம் இன்று (25.02.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில், அவைத் தலைவர் கன்னிமுருகன் தலைமையில், கலைஞர் நகர், தெற்கு பகுதி அலுவலகம், 32/77, அண்ணா பிரதான சாலை, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-78 என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

இதில் விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாக ர் ராஜா, கணக்கு நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், பகுதிச் செயலாளர் கே.கண்ணன் ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளனர்.

இக்கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் ஜம்பு முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் 1000 முதல்வர் மருந்தகங்களை துவக்கி வைத்ததை தொடாந்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதியில் ஆரம்பாக்கம், புதுகும்மிடிப்பூண்டி மற்றும் கவரைப்பேட்டை பகுதிகளில் முதல்வர் மருந்தகங்களை கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், எம்.எல்.ரவி, கா.சு. ஜெகதீசன், எஸ்.ராமஜெயம், கே.ஜி.நமச்சிவாயம், கே.ஆறுமுகம், ஏ.மனோகரன், பழனி, கே.வி.நாகராஜ், அப்பாஸ், கஜேந்திரன், ரவி, மோகன், அருள், சிவா, பா.பரத்குமார், மனோஜ், பாலசந்தர், சாண்டில்யன், மதி, அழகிரி, ரவீந்திரன், ஜெ.என்.எஸ்.பாண்டியன், மோகன், உதயகுமார், விஜய், மஸ்தான், அருண்மொழி, முகிலன், விக்கி, அஜித், பிரகாஷ், பாலாஜி, ஸ்ரீதர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




